**தலைப்பு 284 – வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 284 வனசீவராசிகள் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஜூன் 20 திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 1,631.62 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 1,543.23 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 88.39 மில்லியன் அதாவது 5.42 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| **செலவினம்** | **2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதி ஏற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்பு** | |
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | |
| மீண்டுவருவன | 973.62 | 956.15 | 17.47 | 1.79 |
| மூலதனம் | 658.00 | 587.08 | 70.92 | 10.78 |
| **மொத்தம்** | **1,631.62** | **1,543.23** | **88.39** | **5.42** |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆண்டிற்கான வருமானக் குறியீடு ஒன்றிற்காக ரூபா 20.00 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் மதிப்பிடபட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 22.45 மில்லியன் கூட்டுத்தொகையான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு வருமானத்தில் 12.25 சதவீதம் மிகையாக வருமானம் சேகரிக்கபட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறு

| வருமானக் குறியீடு | 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக மிகைத்தல் |
|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகைத்தல் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 20-03-02-06 | 20.00 | 22.45 | 2.45 | 12.25 |

## 2.3 முற்பணக் கணக்கு

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 28401 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ள படியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ள படியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 45.3 | 38.7 | 33.3 | 37.7 | 150.0 | 133.1 |

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான பொது வைப்புக் கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 341 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழ்க் குறிப்பிடப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் சில பதிவேடுகள் முறைப்படி மற்றும் இற்றைப்படுத்தப்பட்டிருக்காமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|---|
| (அ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அடியிதழ் பதிவேடு | நிதிப் பிரமாணம் 341 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பெறுகைகள் குழுவின் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுவின் வரவுப் பதிவேடு | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 2.11.2(அ) வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | குழுக் கூட்ட அறிக்கைகள் | அரச பெறுகைள் வழிகாட்டல் கோவையின் 2.11.3(அ) வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | யானை வெடி இருப்புப் பதிவேடு | 2003 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 15/2003 ஆம் இலக்க திணைக்கள கணக்கு சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | கணனி துணைப் பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்க வில்லை. |

### 3.2 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 770,630 கூட்டுத்தொகையான 11 வைப்புக் கணக்குகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.3 வருமானக் கணக்கு

1958 இன் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டத்தின் மற்றும் 2009 நவம்பர் 26 ஆந் திகதிய 1629/17 இலக்க அதி விஷேட வர்த்தமானியின் பிரகாரம் விலங்குகள் எடுத்துச் செல்லும் போது அறவிடப்படும் பணம் இந்த திணைக்களத்திற்கு உரிய வருமானக் குறிப்பீட்டுக்கு உரித்தான வருமானம் ஒன்றாக இல்லாமையால் அப் பணத்தை திணைக்களத்தின் வருமானத்தில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 632,510 தொகை

வருமானத்தை தொடர்ந்தும் திணைக்களத்தின் வருமானமாக வருமானக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 28401 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,594,584 ஆகக் காணப்பட்டதுடன் அந்த நிலுவை மீதி 2 வருடங்கள் முதல் 23 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த அந்த நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை நலிவான நிலைமையில் காணப்பட்டது.

### 3.5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### 3.5.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தம்பர் 12 திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், அவ் அறிக்கை 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் சொத்துக்கள் விளைவற்ற நிலையில் அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

(i) 14 மோட்டார் வாகனங்கள் 3 வருடங்களை விட விஞ்சிய காலம் முழுவதும் விளைவற்று மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. மேலும் மாகாண அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த 07 வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 08 மாதம் முதல் 02 வருடங்கள் வரையான கால வீச்சில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. இந்த சொத்துக்கள் தொடர்பாக குறிப்பிட்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) மின்சார வேலி நிர்மாணித்தலுக்கான ரூபா 5,714,780 பெறுமதியான உபகரணங்களும் மரத் தூண்களும் மீகலாவ அடவி வன அலுவலகத்திலும், அவ்வாறான ரூபா 1,024,000 தொகை பெறுமதியான மரத் தூண்கள் நிகவெரட்டிய வாபிகாராமய பன்ஸல வளவிலும் பாதுகாப்பற்ற முறையில் மிகையிருப்பாக காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

வேறு நிறுவனங்களுக்கு சொந்தமான 07 வாகனங்களை ஒழுங்கு முறையாக கையேற்காமல் திணைக்களத்தின் விடயங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) கையேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற விதமாக பயன்படுத்துதல்**

ஜயன்திபுர பத்தரமுல்ல புதிய தலைமை அலுவலகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தின் சட்டரீதியான உரிமை கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஏப்ரல் 30 திகதி வரை உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

கிடைத்திருந்த நன்கொடையிலிருந்து செலவுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் மீதியாகிய ரூபா 507,850 தொகை தொடர்பாக நிதிப் பிரமாணம் 170(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.8 உள்நாட்டு நிதியளித்தல் மூலம் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்**

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடல், செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாமல் கைவிடல் மற்றும் செயற்திட்ட தாமதங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடல்**

திணைக்களத்தினால் 25 செயற்திட்டங்களுக்காக ரூபா 46,185,000 தொகை நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 திகதி வரை அச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடல்**

தெற்கு வனசீவராசிகள் வலயத்தை சேர்ந்த தனமல்வில அடவியில் கொஹல்கல கரம்பவெவ மின்சார வேலி நிர்மாணிப்பதற்காக ரூபா 2,268,000 தொகைக்கான மொத்த மதிப்பீட்டு கிரயம் தொடர்பாக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.

**(இ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றம் அடைந்திராத செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 14 உப செயற்திட்டங்களுக்காக ரூபா 23,696,000 தொகைக்கான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்களின் மூலம் பௌதீக முன்னேற்றம் ஒன்றினையும் பெற்றிருக்கவில்லை.

(ii) ஹொரொவ்பதான மின்சார வேலி நிர்மாணிக்கும் வேலை 2012 அக்தோபர் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட நிர்மாண வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் கால தாமதக் கட்டணமாக ரூபா 17,468,961 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை.

**3.9 செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வன விலங்குகள் மற்றும் தாவரங்களை பாதுகாத்தல்**

வன விலங்குகள் மற்றும் தாவரங்களை பாதுகாத்தல் திணைக்களத்தின் முக்கிய பணியாகக் காணப்பட்டது. ஹொரொவ்பதான யானைகள் தடுத்து வைத்தல் நிலையத்தின் மின்சார வேலி நிர்மாணித்தலின் மூலம் வலுமிக்க யானைகளை சிறிய இடப் பகுதி ஒன்றில் அடைத்து வைத்து வெளியில் இருந்து உணவு வழங்குவதன் மூலம் பெறுமதியான வலுமிக்க மரபணுக்களைக் கொண்ட யானைகளின் பரம்பரை உருவாதலை தடுப்பதற்காக செயற்பட்டிருந்தது. இதன் மூலம் யானைகளுக்கு இம்சைகள் உள்ளாக்கப்பட்டிருந்ததுடன் தூண்களில் இரு பக்கங்களிலும் கூர்கள் பொருத்தப்படுவதினால் மற்றும் தூண்களை இணைப்பதற்காக 3 சுற்று இரும்புக் கம்பிகள் போடப்பட்டிருந்தமையால் யானைகள் காயமடைதல், இறத்தல் நடைபெறக் கூடும் எனவும் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) திட்டமிடல்**

2014 பெப்ரவரி 17 திகதிய இலக்கம் 01/2014 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படாத பல சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்படாத 38 செயற்திட்டங்களுக்காக ரூபா 151.49 மில்லியன் தொகைக்கான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருந்த போதிலும், அச் செயற்திட்டங்கள் தொடர்பாக திணைக்களம் தயாரித்திருந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காட்டப்பட்டிருந்த பணிகளுக்காக ரூபா 21.07 மில்லியன் தொகைக்கான வேறு பணிகள் நிறைவேற்றியிருந்த 02 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) மனித வள அபிவிருத்திக்காக 04 செயற்பாடுகளுக்காக ரூபா 10.00 மில்லியனுக்கான நிதி ஏற்பாடுகள் செய்திருந்த போதிலும் அவற்றில் ரூபா 8.26 மில்லியன் செலவிடப்பட்டு ஒரு செயற்பாடான 148 புதிய வனசீவராசிகள் கட்டுப்பாட்டாளருக்கு பயற்சி வழங்குதல் மாத்திரம் நடைபெற்றிருந்தது.

(iv) வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்டிருக்காவிடினும், நாட்குறிப்புத்தகம் மற்றும் நாட்காட்டி என்பன அச்சிடுவதற்காக ரூபா 1.83 மில்லியன் தொகையும், புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட டபள் கெப் வண்டிகள் Canopy பொருத்துதல் மற்றும் பின்பகுதியை மறைப்பு அமைப்பதற்காக ரூபா 9.83 மில்லியன் தொகையும் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

**3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தேசிய பூங்காக்களில் லென்டானா பிடுங்கி அகற்றுவதற்காக ரூபா 9.64 மில்லியன் தொகை ஒன்று தனியார் நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. லென்டானா பிடுங்கி அகற்றுவது தொடர்பான வரைபுகள் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் வரைபுகளுடன் ஒப்பீடு செய்யும் போது தெளிவில்லாத நிலைமை காணப்பட்டது. பிழையற்ற வரைபு சமர்ப்பிக்கப்பட்டதாக உறுதி ஒன்றினைப் பெற்றுக்கொள்ளாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதே போல் லென்டானா அகற்றுதல் தொடர்பாக திணைக்கள

உத்தியோகத்தர்களின் அல்லது பொறியியளாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 3.11 நிதி ஒழுங்கீன தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

ஹொரொவ்பதான யானைகள் தடுத்து வைத்தல் நிலையத்தின் பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கும் போது ரூபா 11.02 மில்லியன் மூலப் பொருட்களுக்காக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.12 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) நிதிப் பிரமாணம் 109 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்கு இயலாதுள்ள சேதங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 108 இன் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் மூலம் கைவிடுவதற்கான கட்டளை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக 94 சந்தர்ப்பங்களில் ரூபா 15.98 மில்லியனான சேதங்கள் 10 வருடங்களுக்கு அதிகமான காலமாக காணப்பட்டு வருகின்றது.

(ஆ) வனசீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் யானைகள் தடுத்து வைத்தல் நிலையம் நிர்மாணிக்கும் போது 16 கி.மீ. வனாந்தரக் காடு மற்றும் மத்திய அளவான காடுகளை வெட்டி அகற்றிவிட்டு யானைகளுக்கான வேலிகள் நிர்மாணிப்பதற்காக ரூபா 72.82 மில்லியன் தொகை அரச கூட்டுத்தாபனத்திற்கு மிகையாக செலுத்தியுள்ளது.

### 3.13 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்திகள்

2013 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 1-6 (ஊ) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த உடவளவ தேசிய வனப் பூங்காவுக்கு அடக்கப்பட்ட மாடுகள் உட்செல்வதை தடுக்கும் குறிக்கோளுடன் வனப் பூங்காவில் தென் எல்லையில் அமைந்திருந்த மின்சார வேலிக்கு சமமாக 17 கி.மீற்றர்கான இரண்டாம் நிலை மின்சார வேலி ஒன்று ரூபா 5.68 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், வனப் பூங்காவிற்கு வெளி மாடுகள் உள்ளே வருவது தடுக்கப்பட்டிருக்காமையால் மேற்கூறிய குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 3.14 முகாமைத்துவப் பலவீனங்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்த மற்றும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை மற்றும் ஒதுக்கப்பட்ட நாட்களின் எண்ணிக்கை மற்றும் சுற்றுலா பிரயாணிகள் வருகை தந்துள்ள எண்ணிக்கைகள் பற்றி இலகுவாக இனங்காணக் கூடிய விதமாக வசதியான நடைமுறை ஒன்று அறிமுகப்படுத்தியிருக்காமையால் சுற்றுலா விடுதிகளில் இருந்து கிடைக்கும் வருமானத்தின் பிழையற்ற தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நடாத்தப்பட்ட விரிவுரைகள் மற்றும் கலந்துரையாடல்கள் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 13 பிரதேச அலுவலகங்களுக்காக விரிவுரைகளுக்குத் தேவையான உபகரணங்களுக்காக ரூபா 5,249,177 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் கவுடுள்ள தேசிய பூங்காவின் விரிவுரை

உபகரணங்கள் விளைவற்றதாக மற்றும் குறைபயன்பாட்டுடனும் காணப்பட்தென வருடாந்த இருப்பு கணிப்பீட்டில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கருவலகஸ் வெவ பிரதேச செயலகத்தினால் நிர்மாணிக்கப்படுகின்ற மீ ஓய முதல் குடாமெதவாச்சி வரையான 30 கி.மீ. நீளமான மின்சார வேலியின் சுமார் 19 கி.மீ. வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு காணப்பட்ட தெனினும் எஞ்சிய பகுதியின் நிர்மாண வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீகலேவ அடவியில் கும்புக் வெவ, ஹபரவத்த, கந்துலுகமுவ முதல் கந்தேகம வரை நிர்மாணிக்கப்பட்டுவரும் சுமார் 50 கி.மீ. மின்சார வேலி இடைநிறுத்தப்பட்டிருந்தது. இதன் காணரமாக வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த பகுதியையும் பயன்படுத்த முடியாதிருந்தது.

(உ) ஹொரொவ்பதான மின்சார வேலி நிர்மாணிக்கும் போது 9 கி.மீ. இற்கான வனாந்தரக் காடு மற்றும் 7 கி.மீ. மத்திய அளவு காடுகளை வெட்டி அகற்றுவதற்காக தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவர் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது. வன பாதுகாப்புத் திணைக்களம் அல்லது மரக் கூட்டுத்தாபனம் அதற்காக பங்குபற்றியிருக்கவில்லை. அத்துடன் அகற்றப்பட்ட மரங்கள் பற்றிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கருவலகஸ் வெவ பிரதேச செயலகத்தைச் சேர்ந்த 113 கி.மீ. மற்றும் வனாத்தவில்லுவ பிரதேச செயலகத்தை சேர்ந்த 66 கி.மீ. மின்சார வேலியின் பராமரிப்பு வேலைகள் சிவில் பாதுகாப்பு அலுவலர்களினால் முறையாக பராமரிக்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(எ) மீளாய்வாண்டின் போது பிரதேச அலுவலகங்கள் அமைப்பதற்காக 27 கட்டிடங்கள் வாடகைக்கு பெற்றிருந்ததுடன் அவற்றில் 13 கட்டிடங்கள் தொடர்பாக வாடகை உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.15 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 56 | 20 | 36 |
| (ii) | மூன்றாம் நிலை | 32 | 26 | 06 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,419 | 1,048 | 371 |
| (iv) | ஆரம்ப நிலை | 468 | 448 | 20 |
| | **மொத்தம்** | **1,975** | **1,542** | **433** |